# வெந்தீ நாவல் கட்டமைக்கும் தலித் பெண்கள் வாழ்வியல்

முனைவர்.செ.ரவிசங்கர்

*உதவிப்பேராசிரியர்*
*ஒப்பிலக்கியத்துறை,*
*தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*

சு.அபிலா சுந்தரி,

*முனைவர்பட்ட ஆய்வாளர்*
*ஒப்பிலக்கியத்துறை,*
*தமிழியற்புலம்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்*

**முன்னுரை**

வெந்தீ நாவலின் ஆசிரியர் **ரகுதேவன்.** இவர் சேலம் மாநகரைச் சேர்ந்தவர். இவர் வீரியமிக்க படைப்பாளி. தலித்தியத்தை உள்வாங்கி செரித்து அதன்வழி தன்னுடைய படைப்புக்களை முன்வைக்கும் படைப்பாளியாக அடையாளப்படுத்தப்படுகிறார். கவிதை, கட்டுரை, சிறுகதை, புதினம், உரையாடல் என பல்வேறானப் படைப்புக்களைப் படைத்தவர். தலித்திய உணர்வு இவரது படைப்புகளில் மிளிர்கின்றன. தலித் இலக்கியத்தின் இரண்டாம் தலைமுறை எழுத்தாளரான இவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருடைய படைப்பின் கரு முழுமையும் களப்பணி தகவல்களிலிருந்து சேகரிக்கப்பட்டவை என்பதை ஆசிரியரின் நூல்களின் தகவல்கள் வாயிலாக அறிய முடிகிறது. அந்தவகையில் வெந்தீ நாவலில் காணப்படும் தலித் பெண்கள் குறித்த உணர்வுகளையும், வாழ்க்கை அவலங்களையும், அப்பெண்களுக்கு நிகழும் இன்னல்களையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**தலித் பெண்ணியம் - விளக்கம்**

தலித் என்ற நிலையிலும், பெண்கள் என்ற நிலையிலும் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் குறிப்பிடுவது தலித் பெண்ணியம் ஆகும். தலித் பெண்ணியம் என்பதற்கு இரா.பிரேமா **“ தமிழ்நாட்டில் தலித் இனப் பெண்கள் பிற பெண்களைக் காட்டிலும் பொருளாதாரம், கல்வி, சுற்றுப்புற விழிப்புணர்வு, உடல்நலம் பற்றிய அக்கறை எனப் பல நிலைகளிலும் பின்தங்கியுள்ளனர். அவர்களைப் பாலியல் கொடுமைகளும், பலாத்காரமும், உடல் அடிப்படையிலான வன்முறைகளும், அச்சுறுத்தல்களும் நாளும் வருத்துகின்றன. இத்தகைய அடிமைத்தனத்தைப் புரிந்து கொள்ளத் தெரியாத தலித் பெண்களுக்கு அது பற்றிய விழிப்புணர்வு ஊட்டி, அதிலிருந்து அவர்களை மீட்டு தன்னுணர்வுடன் வாழத் தூண்டுவதே தலித் பெண்ணியம் ஆகும்” ( பெண்ணிய அணுகுமுறைகள், ப.144-145)** என்று கூறுகிறார். அதுபோன்ற பெண்களை வெந்தீ நாவலில் காணமுடிகிறது. பூவாயி, வீரம்மாள், போன்ற மலம் அள்ளும் பெண்கள் பெண்களால், உயரதிகாரிகளால் படும் இன்னல்களை மையமாகக் கொண்டு நாவல் நகர்கிறது.

**பூவாயி - தோற்றம் :**

மனிதன் செய்யும் தொழிலில் மிகவும் வருந்தத்தக்கக் கூடியதாக இருக்கும் தொழில் மலம் அள்ளுதல். இதனை வெந்தீ நாவலில் பூவாயி என்ற பாத்திரத்தின் மூலம் சித்திரித்துள்ளார் ஆசிரியர். இப் பெண்ணின் தோற்றத்தை நாவலில் ஆசிரியர் முனிசிபால்டில மலம் அள்ளும் வேலை செய்யும் பூவாயி **“ பீ அள்ளற**

**முறம், மமுட்டி, கட்டை 'வெலக்குமாறு' எல்லாத்தையும் எடுத்து மொறத்துல வெச்சூட்டு வாயி நெறைய வெத்தலை பாக்கப் போட்டு," (ப.19),** வேலைக்கு வருபவளாக சித்திரித்துள்ளார். மலம் அள்ளும் தொழில் என்பது மிகவும் மோசமானத் தொழிலாகவும், அவ்வேலையை செய்யும் பூவாயின் மனநிலையையும், உடல்நிலையையும் ஆசிரியர் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். பூவாயி வெற்றிலைப் பாக்கு போடுவதன் மூலம் தனது மூச்சை காப்பாத்திக் கொண்டு இருப்பதாக நாவலில் பதிவு செய்கிறார் ஆசிரியர். **" வெற்றிலை பாக்கு மட்டும் போடுலன்னா பீ நாத்தம் ஆளையே சாச்சுப் போடும்.. வாயில அடக்கி வெச்சிருந்த 'வெத்தலைச் சலம்' பூவாயி ஒடம்பையும் மூச்சையும் காப்பாத்திட்டு இருந்தது" (பக்.19)** என்பதன் மூலமாக உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும் மலத்தை அள்ளுவதால் தனது உடல் தோற்றம் நலிவடைந்ததை **" பீய குனிஞ்சு குனிஞ்சு வாரிட்டுக் கெடந்ததுனால முதுகுத்தண்டெல்லாம் வளைஞ்சு 'கூனு' உழுக ஆரம்பிச்சது. திருக்கோடிக் கம்பமாட்டம் 'செஞ்செவிக்க' நின்னவ கூனு வளைஞ்சு போயிக் கெடந்தா"(ப.19)** என்று படம் பிடித்துக் காட்டுகிறார்.

**வீரம்மா - பண்பும் தோற்றமும் :**

**'பூவாயி'** மருமகளாக சித்தரிக்கப்படுபவள் தான் வீரம்மா. நாவலாசிரியர் 'வீரம்மா' என்ற பாத்திரத்தை பெயருக்கேற்ற வகையில் வீரமாகவேப் படைத்துள்ளார். தலித் பெண்களுக்கு கல்வி கற்காத நிலை இருக்கின்ற காலத்தில் வீரம்மாவை கல்வி கற்ற பெண்ணாகவும், தனக்கு ஏற்படுகிற அவலநிலையை, கொடுமைகளை எதிர்த்து உரிமையைத் தட்டிக் கேட்கும் பெண்ணாகவும் நாவலில் காட்டியுள்ளார் ஆசிரியர்.

முறையாகப் படித்து வேலைக்கு வர நினைக்கும் வீரம்மாவுக்கு ஆபிஸில் வேலை கிடைக்கவில்லை. இதனை சூப்பிரண்ட் கூறும் விதமாக **நீங்களெல்லாம் படிக்கவே குடாதுன்னு இருந்தாலும் எப்பிடியோ படிச்சுட்டு வந்து எங்கு கழுத்த அறுக்கறீங்க. உங்களுக்கெல்லாம் என்ன தகுதி இருக்குதுன்னு படிக்கறீங்க? உங்களுக்கெல்லாம் கவர்மெண்டுல வேலை குடுக்கறதே பெருசு. இதுல ஆபீசுக்குள்ள '∵.பேன் காத்துல உக்காந்து செய்யற மாதிரி வேலை வேணுமா?..............(ப.85) என்று** நிர்வாகத்தில் இருப்பவர்கள் கூறுவதையும், மேலும் " **என்னதான் தெறமையா படிச்சு வந்தாலும் உங்குகிட்டயெல்லாம் உசுரு பொழைக்கறதே பெரும்பாடா இருக்குது. சூலம் இப்படியே இருந்தறாதுங்க சார் ! எங்களுக்கும் ஒரு காலம் வராமையா போயிரும்? (ப.89)** என்பதில் இருந்து தலித் மக்கள் படிச்சிருந்தாலும் அதற்கேற்ற வகையில் வேலை இல்லை என்பதையும் அவர்கள் எப்படியாவது தங்களுக்கும் ஒரு காலம் வரும் என்று எதிர்பார்க்கும் நிலையையும் வீரம்மா கூறுவதாக நாவல் வழியாக உணர முடிகிறது.

வீரம்மா மேலதிகாரியிடம் **"ச்சீ! உன்னு மாதிரி கேடுகெட்ட சாதில் பொறந்தவன்னு நெனச்சுக்காத? மானம் ஈனமுள்ள சாதில பொறந்தவ. ரோஷம் தாங்க முடியாம நாண்டுட்டு செத்துப் போயிருவம். …… நீங்க பண்ற சாதிக்கொடுமைக்கெல்லாம் என்னால ஒரு விடிவுகாலம் பொறந்ததா இருக்கட்டும். நீங்க பண்ற கொடுமையெல்லாம் தாங்கீட்டு நாங்குளும் உசுரு வாழ்ந்துட்டு இருக்கறம் பாரு நாங்கதாண்டா நல்ல சாதிக்கே பொறந்தவங்க!" (ப.89)** என்று உணர்ச்சி ததும்ப உரைப்பது தன் சாதியின் இருப்பையும், தன்னுடைய ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறது.

**தொழிலில் வரும் சிக்கல் :**

மலம் அள்ளும் பெண்கள் தொழிலுக்குச் செல்வதால் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இதனை ஆசிரியர் தனது நூலில் தெளிவாகக் காட்டியுள்ளார். ஒம்போது மணிக்கு மேல முறத்த எடுத்தூட்டு ஒவ்வொரு ஊடாப் **போயி 'அம்மோய்… பூவாயி வந்திருக்கறன்! 'கக்குச வாரிட்டன். தண்ணி ஊத்துங்கம்மோய் கக்குஸ கழுவி உட்டுட்டுப் போயா்றன் !'( ப.20)**என்று பூவாயி கூப்பிடுவதைக் கேட்டும் வீட்டுக்காரிகள் அசட்டை பண்ணிக்கல!.. என்பதிலிருந்து மேல் சமூகப் பெண்கள் ஒரு பொருட்டாக கருதவில்லை என்பதையும், அவா்கள் பூவாயி-இன் மனஉணா்வுக்கு மதிப்பளிக்கவில்லை என்பதையும் அறிய முடிகிறது. மேலும் பூவாயி தனது வகுத்த வலிக்கு(இயற்கை உபாதையைக் கழிக்க) கக்குசுக்குள்ள போனதை பாா்த்த வீட்டுக்காரி மனோரஞ்சிதம் இன்னதுதான் பேசறன்னு இல்லாம வாயிக்கி வந்தபடி திட்டுவதை ! **" பீ வாாி நாயே ! கக்குஸ் ரூமுக்குள்ள நுழையற அளவுக்கு துணிச்சலு வந்துருச்சா? நியி கக்குசு போறதுக்குத்தான் ஆயரக் கணக்குல பணத்த செலவு பண்ணி கக்குஸ் ரூம் கட்டி வெச்சிருக்கறனா? போறதுடீ அந்தப் பக்கம் !"( ப.20)** என்று கூறுவது உயா் வா்க்க மனநிலையைப் படம்பிடித்துக் காட்டும் விதமாகவும் **" மன்னிச்சிருங்கம்மா ! நானும் அடக்கிப் பாா்த்தன். ஆடக்க முடியாம காலோட வந்துருச்சு ! என்று மன்னிப்புக் கேட்டா" (ப.20)** என்று கூறுவதிலிருந்து பூவாயி- பய உணா்வினை காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

மேலும் குணசுந்தரி என்ற பெண் பூவாயியை " ஏண்டி பூவாயி **! உனுக்கு நேரங்காலமே கெடையாதா? நேரத்துலயே வந்து அள்ளீட்டு போயா்ற ! கக்குஸ்ல கெடக்குறது விடிய விடிய நாறித் தொலைக்குது ! ஊட்டுக்குள்ள குடியிருக்க முடியல ! பத்து மணிக்கு மேல வந்து 'ஜப்ஜாடா' அள்ளி சுத்தம் பண்றதுன்னா வா இல்லன்னா போ !எங்கு வீதிக் கவுன்சிலா் கிட்ட சொல்லி உன்ன கவனிக்கச் சொல்றேன். உனக்கு ஒரு வழி பண்றனா இல்லையான்னு பாரு?"(ப.21)** என்று கூறுவதில் உயா் வா்க்கப் பெண்கள் குறிப்பிட்ட நேரத்தில் வந்து தொழிலைச் செய்துவிட்டு போகும்படியாகவும், அவ்வாறு இல்லையெனில் வேலைக்கு உலை வைக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிற சூழ்நிலையையும் நாவல் வாயிலாக அறிய முடிகிறது.

பூவாயி அவலநிலையை **" கவுன்சிலருட்ட ஏதும் சொல்லீறாதிங்கம்மா அவரு எங்க மேஸ்திரிட்ட சொல்லுவாரு !மேஸ்திரி.. பொம்பளன்னு கூட பாா்க்கம வாயிக்கி வந்தபடி பேசுவாரு !..........சம்பளம் போட மாசக் கணக்காகும் என்னு வகுத்துல அடிச்சுப் போடாதீங்கம்மா ! நீங்க எப்ப வரச் சொல்றீங்களோ அப்பவே வந்து அள்ளீட்டுப் போறன் ! ள" (ப.21)** என்று சொல்வது வீட்டுப் பெண்களிடம் தலித் பெண்கள் அடங்கிப் போகும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதையும், மலம் அள்ளும் தொழில் செய்து வந்ததால் **பூவாய மனுஷப் பொறவியாவே பாக்கல** என்பதையும் நாவல் பதிவு செய்கிறது. இது போன்ற பல்வேறு இன்னல்களை பூவாயி எதிா்நோக்கி இறுதியில் செத்துப் போன பிறகும் பெண்கள் திட்டுவதை **" பீ அள்ளற நாதேரி வேற இன்னும் வரல ! இந்தத் தேவிடியா சக்காளத்தி திடீா் திடீா்னு லீவப் போட்டுத் தொலைச்சா்றா ! கக்குஸல்லாம் நாத்தம் நாரிட்டு கெடக்குதுன்னு' கரிச்சுக் கொட்டுனாங்க" (ப.25)** என்பதன் வாயிலாக உணரமுடிகிறது. இவ்வாறு பூவாயி என்ற தலித் பெண் பாத்திரத்தை ஆசிரியா் படைத்துள்ளாா்.

**மேலதிகாரியினால் படும் இன்னல் :**

ஆணாதிக்கச் சமூகத்தில் அதிகார நிலைக்குப் பயந்து தன் வேலையைச் செய்ய விடாமல் தடுக்கும் நிலைக்கு பெண்கள் தள்ளப்படுகின்றனர். இதனை **“எல்லாப் பெண்களுக்கும் ஆணாதிக்கம் என்ற கொடுமை மூலம் பிரச்சனைகள் காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் தலித் பெண்களின் நிலை மிகவும் மோசமானது .அவர்கள் இன்னும் பல வகைகளில் கஷ்டப்பட்டுக் கிடக்கிறார்கள். ஆத்தகைய பிரச்சனைகளை அவசியம் சொல்ல வேண்டும். அழுத்தமாக அவர்களின் பிரச்சனைகளை முன் வைக்க வேண்டும்” ( பாமா,மகளிர் இதழ்,நேர்காணல்,.ப.23)** என்று பாமா கூறுவது வீரம்மாளுக்கு மிகவும் பொருத்தமாக(தேவையாக) அமைந்துள்ளது. டிஸ்மிஸ் ஆடர கையில வாங்குன வீரம்மா “சார் **! நானு என்ன தப்புப் பண்ணுனன்னு இப்பிடி பண்றீங்க? பதில் சொல்லுலன்னா இந்த எடத்த உட்டுப் போகமாட்டன் ! …. கீழ்ச் சாதிக்காரங்கள கொடுமைப்படுத்துனா என்ன தண்டனைன்னு தெரியுமா? சாதிக் கொடுமை பண்ணுன கேசுல உள்ள புடிச்சு போட்டுருவாங்க? அப்புறம் சாமானியத்துல வெளிய வர முடியாது தெரிஞ்சுக்கோங்க.. அந்த சட்டம் அமைதியா கெடக்குதுன்னு நெனைக்காதீங்க” (ப.86)** என்று கூறுவது தனது டிஸ்மிஸ்க்கான காரணத்தை அறிந்து கொள்ளவும், மேலும் காரணம் சொல்லாமல் இருந்தால் கோர்ட்டுக்கு போவதையும் தனது பிரச்சனையை பற்றி தானே கேட்டறிவதாகவும் அடக்குமுறைகளைக் கண்டு மனம் தளராமல் அதனை எதிர்த்துக் குரல் எழுப்பும் நிலையில் அமைந்துள்ளது.

மேலதிகாரி **“அடிங்க உங்கோயாள! யாருட்ட நின்னு பேசறன்னு தெரியுதா? தொலைச்சிருவன் தொலைச்சு! போயி உன்னால என்ன பண்ண முடியுமோ பண்ணுடி அதையும் பார்த்துக்கறன்…ஒரு மயிரயும் புடுங்க முடியாது! எடத்த உட்டுப் போறயா இல்லயா? மரியாதையா ஊடு போயிச்சேரு! இல்லன்னா ஜெயிலுக்குப் போற களித்திங்கற மாதிரி செஞ்சிருவேன் ! எங்க சாதிக்காரங்களையெல்லாம் பகைச்சீட்டா என்ன நடக்குமின்னு தெரிஞ்சுக்க.? உசுர எடுத்துரவம் !…… சோத்துக்கு வழி பண்ணிக்க”( ப.87)**என்று கூறுவது பெண் என்றும் பாராமல் மேலதிகாரி நடத்தும் நிலையைக் காட்டுகிறது.

**முடிவுரை:**

பெண்ணிற்கு இழைக்கப்பட்ட பல்வேறு கொடுமைகளை நாவலில் காண முடிகிறது. பெண்ணின் தாழ்வு நிலையை மாற்ற முயற்சிப்பதும், தனக்கு நேரும் துன்பத்தை களையப் போராடுவதும், ஆணைப் போலவே பெண்ணும் எல்லா நிலையிலும் சமம் என்ற எண்ணத்தில் போராடுவதும் இதனுள் அடங்குகிறது. சாதி அடிப்படையில் பேசி கேவலப்படும் நிலைக்கு ஆளாகும் பெண்ணாக பூவாயி, தனது சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள ஆதிக்க சாதிப் பெண்களிடம் இரங்கிப் போகும் நிலை, தன்னை அடக்கும் ஆணுக்குப் பதில் பேசி தனது உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் பெண்ணாக வீரம்மா படைக்கப்பட்டுள்ளனர். மேலும் தலித் பெண்கள் மீதான மேலதிகாரியின் ஆதிக்கப்போக்கு, அலுவலரால் அவமானப்படுத்தப்படுதல், தனது வேலை பறி போகும் நிலை, இறுதியில் ஆதிக்க சாதியினரால் தனது மகனை இழக்கும் நிலை போன்ற பல்வேறான கட்டமைப்புகளைக் கொண்டு பெண்களின் வாழ்வியலை வலம் வரும் தீயாக வெந்தீ நாவல் அமைந்துள்ளது.

**துணை நின்ற நூல்கள்:**

[1] வெந்தீ, ரகுதேவன்

[2] பெண்ணியம் அணுகுமுறைகள், இரா.பிரேமா,

[3] பெண்ணே நீ, மகளிர் மாத இதழ்

[4] பெண்ணியமும் , பெண்ணியத் திறனாய்வும், இரா.காஞ்சனா